காரியதரிசி

# துறையூர் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்

(ஒரு நிருபர்)

துறையூர், ஜூன். 1.

31-5-38-ல் இவ்வூர் தர்மராஜா கோவிலில் தோழர் சுவாமி நித்தியானந்த அடிகள் அவர்கள் தலைமையில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் வி. சிதம்பரம் அவர்கள் ஹிந்தி கட்டாயப் பாடத்தை ஒழிக்க தமிழ் மக்கள் பலவகையிலும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அதுசமயம் சென்னை சத்தியாக்கிரகப் படை உதவிக்கு பணம் வசூல் செய்ய தலைவரும் காரியதரிசியும், பொக்கிஷதாரரும், 21. கமிட்டி மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். கூட்டத்திலேயே சில தோழர்கள் பணம் கொடுத்து உதவினார். பிறகு தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது கலைந்தது.